முதன்மைக் கல்வி அலுவலகம்,
தருமபுரி.
18.11.2016

# பத்திரிக்கைச் செய்தி

## +2 பாட ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி வகுப்பு
## மாவட்ட ஆட்சித் தலைவர் ஆய்வு செய்தார்





தருமபுரி மாவட்டத்தில் +2 பொதுத் தேர்வில் தேர்ச்சி குறைந்த பாட ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பு நடைபெற்றது. கடந்த ஆண்டு தருமபுரி மாவட்டத்தில் +2 பொதுத் தேர்வில் 90.42% மாணவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர். வணிகவியல் பாடத்தில் 79.56% , பொருளியல் பாடத்தில் 89.69% கணக்குப் பதிவியல் பாடத்தில் 79.58% வரலாறு பாடத்தில் 89.06% மட்டுமே தேர்ச்சி பெற்றிருந்ததால் மாவட்டத்தின் மொத்த தேர்ச்சி விழுக்காடு குறைந்துள்ளது. இப்பாடங்களை கற்பிக்கும் ஒரு சில ஆசிரியர்களின் தேர்ச்சி சதவீதம் 50% க்கும் குறைவாக உள்ளது. இவ்வாண்டு அப்பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்தி அனைத்து மாணவர்களும் தேர்ச்சி பெற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக மேற்காண் பாட ஆசிரியர்களுக்கான சிறப்பு பயிற்சி பணிமனை நடைபெற்றது. இப்பணிமனையில் 120 ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். தேர்ச்சி குறைவான ஆசிரியர்களின் பணித்திறன் மேம்படுத்த உயர்வான தேர்ச்சி விழுக்காடு அளித்த ஆசிரியர்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பணிமனையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன் அவர்கள் கலந்து கொண்டு ஆய்வு செய்தார். அவர் பேசும்போது தேர்ச்சி குறைந்த பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்கள் கூடுதல் கவனம் செலுத்தியும், சிறப்பு வகுப்புகள் நடத்தியும், அடிக்கடி சிறு தேர்வுகள் மூலம் பயிற்சி அளித்து மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி பெறும் வகையில் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார். தேர்ச்சி அதிகமாக அளித்த ஆசிரியர்களை பாராட்டியதோடு குறைந்த தேர்ச்சி விழுக்காடு அளித்த ஆசிரியர்கள் இவ்வாண்டு தேர்ச்சி அதிகரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். அனைத்து தலைமை ஆசிரியர்களும், ஆசிரியர்களும் இணைந்து இவ்வாண்டு மாவட்டத்தின் தேர்ச்சி சதவீதம் அதிகரிக்க சிறப்பாக பணியாற்ற வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும் அதிக தேர்ச்சி அளித்த அனுபவம் நிறைந்த ஆசிரியர்களைக் கொண்டு பாடங்களை கற்பிக்க வைத்து அதை வீடியோவில் பதிவு செய்து அனைத்து மாணவர்களுக்கும் போட்டுக் காட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார். முன்னதாக பணிமனைக்கு வந்திருந்த அனைவரையும் முதன்மைக் கல்விஅலுவலர் திருமதி.கே.பி.மகேஸ்வரி வரவேற்றார். இக்கூட்டத்தில் மாவட்டக் கல்வி அலுவலர் திரு.சி.இராஜசேகரன், நேர்முக உதவியாளர்திரு.கே.கோவிந்தசாமி, பள்ளித் துணை ஆய்வர் திரு.வி.சீனிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
தருமபுரி.